**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. B.M.MINES, LEASE OVER AN EXTENT OF 4.50.0 HA LOCATED AT SF.NO. 207/1A1, 207/1A2A & 208/3 (P), ALUR VILLAGE, HOSUR TALUK, KRISHNAGIRI DISTRICT ON 12.12.2023 AT 11.00 AM AT M/S. SRI SATHYA SAI MARRIAGE HALL, SIPCOT SERVICE ROAD, SIPCOT PHASE II, MORANAPALLI, HOSUR – 635 109.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru. G. Kumaran | : | Sub Collector (i/c), Hosur (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. R. Venkatesan | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District. |
| 3 | Er. P. Krishnan | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District. |
| 4 | Thiru. C.N.Karthik | : | The Managing Partner, M/s. B.M.Mines |
| 5 | Thiru. M. Sheik Nawas | : | EIA Consultant, M/s. Geo Exploration and Mining Solutions, Salem |
| | Public | : | 66 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector (i/c), Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed rough stone quarry project of M/s. B.M.Mines, Lease over an Extent of 4.50.0 Ha Located at SF.No. 207/1A1, 207/1A2A & 208/3 (P), Alur Village, Hosur Taluk, Krishnagiri District, is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu (SEIAA).

He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as "Dinathanthi" and "The New Indian Express" dated 08.11.2023 and bit notices regarding public hearing was issued to the public of Alur Village, Thinnur Village, Katheraepalli Village and Kothur Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project partner would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub Collector (i/c), Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector (i/c), Hosur has requested the project partner to explain about their proposed Rough Stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru. M. Sheik Nawas, EIA Consultant, M/s. Geo Exploration and Mining Solutions, Salem of the proposed Rough Stone quarry project has made presentation about the proposed Rough Stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Rough Stone quarry project. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Ellaiya, Dasarapalli Village:**

Thiru. Ellaiya said that, he has filed a case against the quarry management for usurping his native land. The Case number is 139 and it is pending in the court.

**The Partner, M/s. B.M. Mines:**

The Partner of M/s. B.M. Mines has informed that, Mr. Ellaiya has referred the case on the land located at Dasarapalli village. At present, the quarry proposed by their management is located at Alur village. Therefore, he said that there is no connection between the case mentioned by him and the public hearing meeting for the proposed quarry which is currently being held.

**2. Thiru. Muthu, Alur Village:**

Thiru. Muthu has requested that, the road leading to the quarry from the main road should be sprinkled periodically with water sprinklers to control dust emanation.

**3. Thiru. Prakash, Alur Village:**

Thiru. Prakash has said that, there is a lot of dust emanating on the road leading to the quarry from the main road and the municipal solid waste is being dumped nearby. Therefore, he requested the quarry management to sprinkle water on the road leading to the quarry to control dust emanation. He asked to follow the method of Nonel blasting in the quarry as mentioned in the power point presentation. He also requested to operate the quarry without harming the nearby farmers.

**The Partner, M/s. B.M. Mines:**

The Partner of M/s. B.M. Mines has informed that, he would fulfill all the demands of him including sprinkling water on the road, following the Nonel blasting system.

**4. Thiru. Venkatesapa, Alur Village:**

Thiru. Venkatesapa has said that, the quarries generally do not follow the Nonel blasting method and water sprinkling to prevent dust emanation on the road, so he requested the quarry management to follow them properly. He also asked the quarry management to fulfill public demands.

5. **Thiru. Natarajan, Hosur:**

Thiru. Natarajan has requested that, only local public should be allowed to participate in the respective quarry's public hearing.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 17 number of petition were received on the proposed Rough Stone Quarry project of M/s. B.M.Mines during the public hearing meeting.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public and only one E-mail representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District on the proposed Rough Stone Quarry project of M/s. B.M.Mines.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

14/12/2023

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

14/12/22

**Sub Collector (i/c)**
**Hosur**

4/7

**District Collector**
**Krishnagiri**

4/7

**திரு. B.M.மைன்ஸ், சர்வே. எண். 207/1A1, 207/1A2A & 208/3 (P), ஆலூர் கிராமம், ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 4.50.0 ஹெக்டர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 12.12.2023 அன்று சிப்காட் சர்வீஸ் ரோடு, சிப்காட் 2 வது வளாகம், மோரனப்பள்ளி, ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள திரு. ஸ்ரீ சத்யா சாய் கல்யாண மண்டபத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. G.குமரன் | : | சார் ஆட்சியர் (பொ), ஓசூர். (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. R. வெங்கடேசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 3 | Er.P.கிருஷ்ணன் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 4 | திரு. C.N. கார்த்திக் | : | பங்குதாரர் திரு. B.M.மைன்ஸ் |
| 5 | திரு.M.ஷேக் நவாஸ் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம். |
| | பொதுமக்கள் | : | 66 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திரு. B.M.மைன்ஸ் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர் (பொ), ஓசூர் அவர்கள், பொதுமக்கள் மற்றும்

தி/ள். B.M.மைன்ஸ் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 08.11.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும் ஆலூர் கிராமம், தின்னூர் கிராமம், கதிரேப்பள்ளி கிராமம், கொத்தூர் கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரியின் உரிமையாளர் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர் (பொ), ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். தி/ள். B.M.மைன்ஸ் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் பங்குதாரர் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். B.M.மைன்ஸ் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.M.ஷேக் நவாஸ், தி/ள்.ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. எல்லையா, தசரப்பள்ளி கிராமம்:**

திரு. எல்லையா அவர்கள், இக்குவாரி நிர்வாகத்தினர் மீது தனது பூர்விக நிலத்தை அபகரித்துள்ளதாக தான் வழக்கு தொடுத்துள்ளதாக தெரிவித்தார். அவ்வழக்கு எண்; 139 எனவும், அவ்வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக தெரிவித்தார்

**குவாரியின் உரிமையாளர்:**

குவாரியின் உரிமையாளர் அவர்கள், திரு. எல்லையா அவர்கள் குறிப்பிட்டது தசரப்பள்ளி கிராமத்தில் அமைந்துள்ள நிலத்தின் மீதான வழக்கு ஆகும். தற்போது, தங்களது நிறுவனத்தினால் முன்மொழியப்பட்ட குவாரியானது ஆலூர் கிராமத்தில் அமைந்துள்ளது. எனவே, அவர் குறிப்பிட்டுள்ள வழக்கிற்கும், தற்பொழுது நடைபெறும் குவாரிக்கு உரிய பொதுமக்கள் கருந்து கேட்பு கூட்டத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என தெரிவித்தார்.

**2. திரு. முத்து, ஆலூர் கிராமம்:**

திரு. முத்து அவர்கள், பிரதானச் சாலையிலிருந்து குவாரிக்கு செல்லும் சாலையில் தண்ணீர் தெளித்து தூசு எழும்பாத வண்ணம் பராமரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**3. திரு. பிரகாஷ், ஆலூர் கிராமம்:**

திரு. பிரகாஷ் அவர்கள், பிரதானச் சாலையிலிருந்து குவாரிக்கு செல்லும் சாலையில் அதிகளவு தூசு எழும்பவதாகவும் மேலும், அருகில் மாநகராட்சியின் திடக்கழிவுகள் கொட்டப்படுவதாகவும் தெரிவித்தார். எனவே, குவாரிக்கு செல்லும் சாலையில் தண்ணீர் தெளித்து தூசு எழும்பாத வண்ணம் பராமரிக்குமாறு கேட்டுக்கொண்டார். நிழற்படக் விளக்கக் கண்காட்சியில் குறிப்பிட்டுள்ளவாறு குவாரியில் நாணல் வெடிப்பு முறையை பின்பற்றுமாறு கேட்டுக்கொண்டார். மேலும், அருகிலுள்ள விவசாயிகளுக்கு பாதிப்பில்லா வண்ணம் குவாரியை இயக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**குவாரியின் உரிமையாளர்:**

குவாரியின் உரிமையாளர் அவர்கள், சாலையில் தண்ணீர் தெளித்தல், நாணல் வெடிப்பு முறையை பின்பற்றுதல் மற்றும் பிற கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றுவதாக தெரிவித்தார்.

**4. திரு. வெங்கடேசப்பா, ஆலூர் கிராமம்:**

திரு. வெங்கடேசப்பா அவர்கள், நாணல் வெடி வைக்கும் முறை மற்றும் சாலையில் தூசு எழும்பாத வண்ணம் தண்ணீர் தெளித்தல் ஆகியவற்றை குவாரிகள் பின்பற்றுவதில்லை என்றும், எனவே இக்குவாரி நிர்வாகத்தினர் அவ்வாறு இல்லாமல் அவற்றை முறையாக கடைபிடிக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும், பொதுமக்கள் கோரிக்கைகளை நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொண்டார்.

**5. திரு. நடராஜன், ஓசூர்:**

திரு. நடராஜன் அவர்கள், குவாரிக்குரிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு உள்ளூர் பொதுமக்களை மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டுமாறு கேட்டுக்கொண்டார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. B.M.மைன்ஸ் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து 17 மனுக்கள் பெறப்பட்டது.

மேலும், திரு. B.M.மைன்ஸ் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை. மேலும், மின்னஞ்சல் மூலமாக ஒரு மனு மட்டும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் வரப்பெற்றுள்ளது,

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

14/12/2023

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**ஓசூர்**

14/12/2023

**சார் ஆட்சியர் (பொ)**
**ஓசூர்**

7/7

**மாவட்ட ஆட்சியர்**
**கிருஷ்ணகிரி**

7/7